No.8650/சநது/ஊபி/HW-8/2016-17
புதுச்சேரி அரசு
சமூக நலத்துறை
****

புதுச்சேரி, தேதி25.07.2016

<u>மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய விருதுகள்</u>

மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் உலக ஊனமுற்றோர் தின விழாவின் போது (டிசம்பர் 3-ம் நாள்) ஊனமுற்றோர் நலனுக்காக தேசிய விருதுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகின்றது.

1. ஊனமுற்ற சிறந்த ஊழியர்/சுய தொழில் புரிவோருக்கான விருது
2. ஊனமுற்ற சிறந்த அதிகாரி மற்றும் சிறந்த பதவி நிலை அதிகாரி/முகவர் விருது
3. ஊனனமுற்றோர் முன்னேற்றத்திற்காக பாடுபாடும் சிறந்த நபர் மற்றும் நிறுவனங்களுக்கான விருது
4. மற்றவருக்கு முன்னுதாரனமாக திகழும் ஊனமுற்றோர்க்கான விருது
5. ஊனமுற்றோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கான குறிக்கோளுடன் சிறந்த செயல் முறை ஆய்வு/புதுமையான வழிகாணுதல்/பொருள்கள் உருவாக்குதல் ஆகியவற்றிற்கான விருது
6. ஊனமுற்றோர் தனக்குள்ள குறையை குறை என்று எண்ணாத வண்ணம் தடையின்றி வாழும் சூழ்நிலை உருவாக உழைத்திடும் சிறந்த நபருக்கான விருது
7. ஊனமுற்றோருக்கு புணர் வாழ்வு உதவிகள் புரியும் சிறந்த மாவட்டத்திற்கான விருது
8. தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சி கழகத்திற்கு சிறந்த பாலமாக செயல்படும் நிறுவனத்திற்கான விருது
9. வயது வந்த ஊனமுற்ற தலை சிறந்த படைப்பாளி விருது
10. ஊனமுற்ற குழந்தைகளுக்கான தலை சிறந்த படைப்பாளி விருது
11. சிறந்த பிரெய்லி அச்சகம்
12. சிறந்த அணுக தக்க இணையதளம்
13. ஊனமுற்றோருக்கு அதிகாரமளித்தலில் சிறந்த மாவட்டத்திற்கான விருது
14. சிறந்த ஊனமுற்ற விளையாட்டு வீரருக்கான விருது

2. இவ்வாண்டும், இவ்விருதுகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விருதுகளைப் பற்றி மேலும் விபரங்கள் அறியவும், விண்ணப்ப படிவங்கள் பெறவும் எண்.1, மெயின் ரோடு, சாரதாம்பாள் நகர், எல்லைப்பிள்ளைச்சாவடி, புதுச்சேரி என்ற முகவரியில் உள்ள சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளவும்.

3. காரைக்கால் பகுதியில் உள்ளோர் உதவி இயக்குநர், சமூக நலத்துறை, காரைக்கால அவர்களை நேரில் அணுகவும்.

4. மாகி/ ஏனாம் பகுதியில் உள்ளோர் நல அதிகாரி, சமூக நலத்துறை, மாகி/ ஏனாம் அவர்களை நேரில் அணுகவும். மேலும் விவரங்களுக்கு (www.disabilityaffairs.gov.in) என்ற இணையதளத்தை பார்க்கவும்.

5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் இத்துறையை வந்தடைய வேண்டிய கடைசி நாள் **<u>8/8/2016</u>**. அதற்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டாது.

இரா மீனாகுமாரி
3/6 (இரா. மீனாகுமாரி)
இயக்குநர்